தமிழ்நாடு சட்டப் பேரவை

சனிக்கிழமை, 1971 டிசம்பர் 18.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வி நேரம் தொடங்குவதற்கு முன்னால் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன்.

இரண்டு குறுகிய கால வினாக்களையும் சேர்த்து இன்றைய வினாக்கள் பட்டியலில் மொத்தம் 52 வினாக்கள் உள்ளன. இவை தவிர, பேரவையின் 41-ஆம் விதியின்கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் இரண்டு உள்ளன. மேலும், 4 சட்ட முன்வடிவுகளும் 4 அரசினர் தீர்மானங்களும் உள்ளன. எனவே, கேள்வி நேரத்தை 10 மணிக்கு முடிப்பதில் எல்லா உறுப்பினர்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Police Research Centre

* 544 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the nature of the work done by the Police Research Centre in Madras City; and

(*b*) the cost of the maintenance of this Centre?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) காவல்துறை ஆராய்ச்சி நிலையத்தின் பணிகளைப் பொதுவாக நான்கு வகையாகப் பிரிக்கலாம் அவையாவன :—

1. ஆராய்ச்சிப் பொறுப்புகள்.
2. குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பது குறித்த மாநிலச் செயல்வழி முறைகள் கழகப்பதிவேடுகளை (State *Modus Operandi* Bureau) பேணுதல்.
3. புள்ளி விவரங்கள்.
4. கடிதப் போக்குவரத்து.

இந்த நான்கு பிரிவுகளின் மூலம் குற்றங்கள் சம்பந்தமான ஆராய்ச்சிகளை நடத்தி, குற்ற புலனாய்வுத் துறைக்கு உதவுகின்றது.

(இ) ஆண்டொன்றுக்கு ரூ. 77,200.

திரு. கே. டி. கே. தங்கமணி: சென்னையிலிருக்கும் இந்த ஃபாரன்ஸிக் லாபரடரிக்குப் புதிதாக அதிகப் பணம் கொடுத்திருக்கிறார்களே அதனுடைய செயலாற்றும் முறை எம்முறையில் இருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நன்முறையில் இருக்கிறது.

Posts of Deputy Inspector-General of Police

* 545 Q.—Thiru A. SWAMIDHAS: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether a number of posts of Deputy Inspector-General of Police have been created in this State during 1969; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: உணவுப் பிரிவு-குற்றப் புலனாய்வுத் துறைக்கு காவல் துறை டெப்யுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல் பதவி ஒன்றும், தமிழ்நாடு காவலர் ஆணைக்குழு (போலீஸ் கமிஷன்) உறுப்பினர்-செயலாளர் பதவிக்கு டெப்யுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல் பதவி ஒன்றும் 1969-ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டன.

திரு. எ. சுவாமிதாஸ்: இந்த நியமனங்களுக்காக ஆண்டு தோறும் அரசாங்க நிதியிலிருந்து எவ்வளவு செலவாகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாதமொன்றுக்கு டி.ஐ.ஜி.-க்கு ரூ. 1,600 முதல் ரூ. 2,000 வரை சம்பளமாக செலவாகிறது.

காவல் துறை அலுவலர்கள் பயிற்சிக் கல்லூரி

* 546 வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேலூரிலுள்ள போலீஸ் பயிற்சிக் கல்லூரியை சென்னைக்கு மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தற்போது அத்தகைய செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, வேலூரிலுள்ள போலீஸ் பயிற்சிக் கல்லூரிக்குப் பயிற்சிக்காகப் போகக் கூடியவர்கள் தங்குவதற்கு வசதி இல்லாத நிலை இருப்பதோடு, அவர்களுடைய உணவுக்குக் கூட கஷ்டமாக இருக்கிறது என்று அரசுக்குத் தகவல் வந்திருக்கிறதா? அதற்கு அரசு என்ன பரிகாரம் காண முயற்சிக்கிறது?